# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 27.09.2019**

விசாரணை நடைபெற்ற இடம் : மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் மாவட்டம். விருதுநகர்

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3974/SCIC/2019**

| | | |
|---|---|---|
| திரு. R. ராஜ்குமார்.<br>345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,<br>கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு<br>விருதுநகர் மாவட்டம். | -- | மேல்முறையீட்டாளர் |

/எதிர்

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,<br>சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம்,<br>திருவில்லிபுத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம் | -- | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (27.09.2019) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட முகாம் விசாரணைக்கு மனுதாரர் திரு. R. ராஜ்குமார் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு வே. அல்லிராஜ், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் வன விரிவாக்க அலுவலர், வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் 12.01.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் சாப்டூர் வனச்சரகத்திற்குட்பட்ட தாணிப்பாறை முதல் சதுரகிரி கோவில் வரை வனத்துறை சம்பந்தமாகவும், தாணிப்பாறை சூழல் மேம்பாட்டு குழு சம்பந்தமாகவும் 76 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் 28.02.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக பதில் அளித்துள்ளார். இதன் பின்னர் 23.03.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதில் தான் 76 இனங்களில் தகவல்கள் கோரியிருந்ததாகவும் ஆனால் 60 இனத்திற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மீதி 16 இனங்களுக்கு தகவல்கள் வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்து அதனை வழங்குமாறு கோரியுள்ளார். இது குறித்து தகவல்கள் ஏதும் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து கிடைக்கப்பெறாததால் இவ்வாணையத்திற்கு பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்து

10,14,15,17,19,48,49,50,51,55,60,66,68,73,74,75, ஆகிய 16 இனங்களுக்கு தகவல் வழங்க ஆணையிட கோரியுள்ளார். அதன் பேரில் இவ்வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 26.04.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் மனுதாரருக்கு இனங்கள் 10,14,15,17,19,55,66,73 முதல் 75 வரைக்கான விவரங்கள்/தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் இல்லையென்றும் மற்ற இனங்களான 48,49,50,51,60,68, ஆகியவற்றிற்கு பதில்/தகவல் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து மனுதாரருக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதத்தின் நகலை விசாரணையின்போது சமர்பித்தார். மேலும் தகவல் மறுக்கப்பட்ட இனங்கள் தாணிப்பாறை சூழல் மேம்பாட்டுக்கு குழுவினைச் சார்ந்தது என்றும் தங்கள் அலுவலகத்தில் அது குறித்த தகவல்கள் இல்லையென்றும் தெரிவித்தார்.

4. மனுதாரரின் மனு மற்றும் பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ள பதில்கள் ஆகியவற்றை பரிசீலிக்கையில் மனுதாரர் சுமார் 75 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார் என தெரியவருகிறது. பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலரால் இனம் வாரியாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதையும் காண முடிகிறது. **இருப்பினும் 10,14,15,17,19,55,66,73 முதல் 76 வரைக்கான விவரங்கள்/தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் இல்லையென்றும் அதில் சில விவரங்கள் தாணிப்பாறை சூழல் மேம்பாட்டுக்கு குழுவினைச் சார்ந்தது என்றும் பொது அதிகார அமைப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாணை கிடைக்கப்பெற்ற 20 தினங்களுக்குள் அக்குழுவிற்கு இம்மனுவின் நகலை அனுப்பி அவர்களிடம் இருக்கும்/பராமரிக்கப்படும் தகவலை பெற்று மனுதாரருக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி அதனை அவர் பெற்றுக் கொண்டார் என்ற விவரத்தை 30 தினங்களுக்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு இவ்வழக்கு முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3974/SCIC/2019</u>**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
சாம்பல் நிற அணில் வன உயிரினச்
சரணாலயம்,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம்

**மனுதாரர்**

திரு. R. ராஜ்குமார்.
345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,
கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு
விருதுநகர் மாவட்டம்.

*JJ/PA 03.10.2019*